எங்களின்
உத்வேகம்
நற்செய்தியிலிருந்து
வருகிறது




தயாரித்தவர்கள்:
Mr. Wilfred Wong
பிஉடல் இயக்க மருத்துவர்
(ியோதெரபிஸ்ட்)
கத்தோலிக்க உடல் மறுவாழ்வு குழு

திருத்தம்:
Fr. Eugene
இயக்குனர் மாமறைமாவட்ட
மேய்ப்புப்பணி மையம் (API)

email:
apidirectorkl@gmail.com



INTERNAL CIRCULATION ONLY



BUL 31/2023


## குழுவின் நோக்கம்

எங்கள் குழுவின் முதன்மையான கவனம் சமூகத்தில் தேவைப்படும் உடல் மறுவாழ்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே, குறிப்பாக உடல் குறைபாடுகள் உள்ள ஒதுக்கப்பட்டவர்கள், வீட்டில் முடங்கியிருப்பவர்கள், மற்றும் தனிநபர்கள். தற்போது, செராஸில் உள்ள SFX முதியோர் காப்பகத்தில் அருட்சகோதரிகளால் (LSP) வயதான முதிர்ந்தோரைக் காக்கும் திட்டத்தில் நாங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். எங்கள் தன்னார்வ நடவடிக்கைகளில் தொடக்க நிலை அபாய மதிப்பீடுகளை நடத்துதல், உடல் இயக்க மருத்துவ (பிசியோதெரபி) ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் உடல் மறுவாழ்வு பயிற்சிகள் மூலம் தனிநபர்களுக்கு வழிகாட்டுதல் ஆகியவை அடங்கும்.

மேலும், கத்தோலிக்க உடல் மறுவாழ்வுக் குழு எங்களைப் போன்ற தொழில் வல்லுநர்களுக்கு ஒருவரையொருவர் இணைக்கவும், ஆதரிக்கவும், சமூக உணர்வை வளர்க்கவும் ஒரு தளமாக செயல்படுகிறது. COVID-19 தொற்றுநோய்களின் சவாலான காலங்களில் பல தொடர்புடைய சுகாதார வல்லுநர்கள் அனுபவிக்கும் ஆன்மீக மற்றும் உடல் ரீதியான சோர்வை உணர்ந்து, எங்கள் குழு ஒரு ஆதரவுக் குழுவாக செயல்படுகிறது, ஆன்மீக வளர்ச்சி, புனிதம் மற்றும் கத்தோலிக்க உடல் மறுவாழ்வு நிபுணர்களிடையே கூட்டுறவு மற்றும் தொடர்பு சாதனங்களாக ஊக்குவிக்கிறது.

## குழுவின் தொடக்கும் வளர்ச் ியும்

இந்த முயற்சி அக்டோபர் 2021 இல் எங்கள் ஆன்மீக இயக்குனர் அருள்பணி பிலிப் சுவா, மாமறைமாவட்ட மனநல பணிக்குழு மற்றும் மலேசிய கத்தோலிக்க மருத்துவர்கள் சங்கத்தை சேர்ந்த எங்கள் மருத்துவ ஆலோசகர், டாக்டர் ஐலென். குறிப்பாக COVID-19 தொற்றுநோய் காலத்தின்போது, நமது கத்தோலிக்க சமூகத்தின் சுகாதாரத் தேவைகளில் ஒரு இடைவெளி இருப்பதும் உடல் மறுவாழ்வு சேவைகளின் மந்த நிலையும் அடையாளம் காணப்பட்டது, இந்தத் தேவையால் உந்துதல் பெற்ற இளம் தொழில் வல்லுநர்கள் குழு ஒன்று கூடி இந்த கவலையை ஆய்ந்து சமூகத்திற்கு பயனளிக்கும் வகையில் தேவைப்படுவோரின் வீட்டு வாசலில் சென்று சேவை செய்ய அர்ப்பணித்துள்ளது. தொடர்ந்து ஆட்சேர்ப்பு மற்றும் தன்னார்வ ஆர்வலர்கள் மூலம் தொடர்ச்சியான வளர்ச்சியை நாங்கள் அடைந்துள்ளோம். கோலாலம்பூர் உயர்மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து கத்தோலிக்க உடல் மறுவாழ்வு நிபுணர்களையும் ஒன்றிணைத்து மேலும் பலருக்கு சேவை செய்ய வேண்டும் என்பதே எங்கள் நம்பிக்கை.

உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்குச் சேவை செய்வதில் நீங்கள் ஆர்வமாக இருந்தால் மற்றும் நீங்கள் உடல் மறுவாழ்வு நிபுணராக இருந்தால் அல்லது எங்கள் குழுவில் ஒருவராக இருக்க விரும்பினால், எங்களுடன் சேர 018-9034077 என்ற எண்ணில் திரு. வில்பிரட் வோங்கை தொடர்பு கொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறோம். உங்களைச் சந்திப்பதற்கும், மற்றவர்களின் வாழ்வில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த ஒன்றாகச் செயல்படுவதற்கும் நாங்கள் உங்களை எதிர்நோக்குகிறோம்.


29 & 30 ஜூன் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 17 ஆம் ஞாயிறு


**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:**

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
குடும்ப மற்றும் வயது முதிர்ந்தவர்கள் மீது அக்கறை

மாதாந்திர நிகழ்வு:
உலக பெற்றோர் மற்றும் முதியோர் தினம்



# கத்தோலிக்க உடலியக்க மறுவாழ்வுக் குழு

## (கோலாலம்பூர் மாமறைமாவட்டம்)

கத்தோலிக்க உடலியக்க மறுவாழ்வுக் குழு என்பது, உடல் ரீதியான மறுவாழ்வு நிபுணர் குழுவான தொழில்சார் சிகிச்சையாளர்கள் தலைமையில், உடல் இயக்க மருத்துவர்கள் (பிசியோதெரபிஸ்டுகள்), பேச்சு சிகிச்சையாளர்கள், உணவியல் நிபுணர்கள் போன்ற நிபுனத்துவம் பெற்ற பலரைச் சேர்க்கும் வகையில் விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நமது உத்வேகம் நற்செய்தியிலிருந்து வருகிறது, அங்கு இயேசு துன்பத்தில் இருந்தவர்களை குணப்படுத்தும் அற்புதங்களைச் செய்தார் (மத்தேயு 4:24, 9:2-8). அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதன் மூலம், எங்கள் தொழில் மற்றும் அன்றாட பணிகள் மூலம் நம் சமூகத்திற்கு சிறந்த அக்கறையை வழங்க முயற்சிக்கிறோம்.